# THE DROPOUT OF ARABIC COLLEGE STUDENTS IN SRILANKA ‘‘THE SHARQIYYAH ARABIC COLLEGE AS A SAMPLE’’

**ARM Mahsoom[(1)], AMM Hijas [(2)] Mr. MHA Munas [(3)]**

[1] Final Year Specialization Student & [2] 2nd Year Specialization Student in Linguistics & Translations,

[3] Senior Lecturer Dept. of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University Of Srilanka

mahsoomzahry92@gmail.com, hijas392@gmail.com, mhamunas@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு மாணவனின் ஆரம்பக் கல்வியாக குர்ஆனியக் கல்வி அமைய வேண்டுமென்பது இஸ்லாமிய கல்வியலாளர்களது உறுதியான நிலைப்பாடாகும். அல்குர்ஆனுக்கும் மாணவர்களுக்குமிடையில் உயிரோட்டமானதொரு உறவை வளர்ப்பதில் அறபுக் கலாசாலைகளது பங்களிப்பு மகத்தானது. மனிதன மேம்பாட்டுக்கு உதவும் அறிவை வழங்கி வந்த அறபுக் கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகிச் செல்வதானது ஓர் பிரச்சினையாக ஆய்வாளர்களினால் அவதானிக்கப்பட்டதே இந்த ஆய்விற்கான பின்னனியாகும். இடைவிலகலைத் தூண்டும் காரணிகளைக் கண்டறிதல் இங்கு ஆய்வுப் பிரச்சினையாக நோக்கப்பட்டு அக்காரணிகளைக் கண்டறிவதும், அதற்கான தீர்வுகளை முன்வைப்பதுமே பிரதான நோக்கமாகக் கருதப்பட்டு இவ்வாய்விற்கு கிழக்கின் முதல் அறபுக் கல்லூரி, அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி ஆய்வுப் பிரதேசமாக வரையறுக்கப்பட்டு ஆய்வுத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

சமூகவியல் பண்புசார் ஆய்வான இதில் ஆய்வுப் பிரதேச மாணவர்கள், ஆசிரியர்கள் மூலம் பெறப்பட்ட நேர்காணல், வினாக்கொத்து, கலந்துரையாடல் போன்ற முதலாம் நிலைத் தரவுகளினூடாகக் குறித்த அறபுக் கலாசாலை ஷரீஆ துறை மாணவர்கள் இடைவிலகியதற்கான காரணங்களை அடையாளப்படுத்தியுள்ளதோடு, அக்காரணிகள் அவர் சார் மட்டங்களிலும் செல்வாக்குச் செலுத்தும் பாங்கினையும் கண்டறிந்து ஒரு விவரணஆய்வாக (Descriptive) இது முன்வைக்கப்பட்டுள்ளது. இடைவிலகலுக்கான காரணிகளில் மாணவர், குடும்பம், கல்லூரி, சமூகம் சார் காரணிகளாக முன்வைக்கப்பட்ட அனைத்துத் தகவல்களையும் வகைப்படுத்தி கல்லூரி சார் காரணிகளான பாடத்திட்டம், கற்றல், கற்பித்தல் முறைகள், ஆசிரியர் மாணவர் உறவு போன்ற காரணிகளை விரிவாக ஆய்வு செய்துள்ளனர். அத்துடன் இடைவிலகலைக் குறைப்பதற்கான கல்லூரியின் பாடத்திட்டம் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு மாணவர்களது ஆளுமை விருத்திக்கும், தொழில் வாழ்க்கைக்கும் தேவையான அம்சங்களும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். போன்ற முன்மொழிவுகளை இவ்வாய்வு பிரசவித்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** இடைவிலகல், அறபுக் கல்லூரி, ஷரிஆ

## அறிமுகம் (Introduction)

இற்றைக்கு இரண்டு நூற்றாண்டுகள் பழமை வரலாற்றைக்கொண்ட அரபு மத்ரஸாக்களின் சமூக சீர்திருத்தப்பணி வகிபங்கு அளப்பரியது . இஸ்லாமிய நாகரீகத்தை மேம்படுத்தி ஒரு குறிப்பிட்ட காலம்

வரை இக் கல்லூரிகள் கல்வியையும் பண்பாட்டு விழுமியங்களையும் ஒருங்கே வழங்கும் பிரதான பணியை நிறைவேற்றி வந்தது என்பதை வரலாறு கூறுகின்றது. இத்தகைய கல்லூரிகள் நூற்கல்வியை வழங்கியது மட்டுமன்றி மாணவர்களுக்கான ஆளுமையையும் வழங்கியுள்ளமை தெளிவாகின்றது. எமது நாட்டில் கிராமத்துக்கு ஒரு அறபுக்கல்லூரி என 300 இற்கும் மேற்பட்ட அரபுக் கல்லூரிகள் காணப்படுவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. (Annual report, 2010).

இக் கல்லூரிகள் பெரும்பான்மையாக முழு நேர வதிவிட அமைப்பைக் கொண்ட கல்லூரிகளாகும். இக் கல்லூரிகளில் ஆரம்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களது தொகைக்கும், பட்டம் பெறும் மாணவர்களது தொகைக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுவதை அவதானிக்க முடிநத்தது. எனவே இந்த இடைவெளிக்கான காரணியாக இடைவிலகல் செயற்பாடு அமைந்துள்ளது. இடை விலகல் என்பது ‘‘ஆட்சேர்ப்பு விண்ணப்பித்தலின் பின் குறித்த கற்கையை நிறைவுபடுத்த முன்னர் ஏதாவது காரணங்களின் அடிப்படையில் குறித்த கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளை விட்டும் தூரமாதல்’’ بوني كارا.(2007) என வறையறை செய்ய முடியும். இடைவிலகல் என்பது உலகெங்கும் பரவலாகக் காணப்படும் ஓர் சிக்கலான பிரச்சினையாகும்..

எனவே அரபுக் கல்லூரி மாணவர்களது இடைவிலகலுக்கான காரணங்களை கண்டறியும் நோக்கிலே அரபுக் கல்லூரி மாணவர் இடைவிலகல் என்ற தலைப்பில் கிழக்கின் முதன்மை அரபுக் கல்லூரியான அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக்கல்லூரியை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வின் நோக்கம் (Objective Of Study)**

- அறபுக் கல்லூரிகளிலிருந்து ஷரீஆ துறை மாணவர்கள் இடைவிலகலுக்கான காரணிகளைக் கண்டறிதல்.
- கண்டறியப்பட்ட காரணிகள் மாணவர்களின் இடைவிலகலுக்கு எந்தளவு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை அடையாளப்படுத்தல்.
- அறபுக் கல்லூரி மாணவர்களது இடைவிலகலைக் குறைப்பதற்கான தந்துரோபாயங்களையும், ஆலோசனைகளையும் முன்மொழிதல்.

**ஆய்வுப் பிரச்சினை (Research Problem)**

இலங்கையில் காணப்படும் அறபுக் கல்லூரிகளது ஆட்சேர்ப்பு வீதமும், பட்டதாரிகளது வெளியேறு வீதமும் அமர்முடுகளில் செல்வதனை அவதானிக்க முடிகிறது. இது, குறித்த மாணவர்கள், அவர்களது குடும்பம், கல்லூரி, அவர்கள் சார்ந்த சமூகம் போன்றனவற்றில் எத்தகைய சிக்கல்கள் தோன்றக் காரணமாகிவிடுகின்றன ?

**ஆய்வு முறையியல் (Research Methodology )**

குறித்த அறபுக் கல்லூரியிலிருந்து இடைவிலகிய மாணவர்களது தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக கல்லூரியின் நிர்வாகம், அதிபர், ஆசிரியர்கள், இடைவிலகிய மாணவர்களது சக நண்பர்கள், இடைவிலகிய மாணவர்கள், அவர்கள் மீது அக்கறை கொண்ட சமூக முக்கியஸ்தர்கள் ஆகியோரிடம் நேர்காணல், வினாக் கொத்து, கலந்துரையாடல் மற்றும் தொலைபேசித் தொடர்புகள் ஆகிய முதலாம் நிலைத் தரவுகளை வைத்தே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவாக குறித்த அரபுக் கல்லூரி தொடர்பான ஆவணங்களையும் தகவல்களையும்

பெறுவதற்காக கல்லூரியினால் வெளியிடப்பட்ட சிறப்பு மலர்கள், மற்றும் இடைவிலகல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட ஆய்வுகள் மற்றும் இதர தகவல்கள் இணையதளம் ஆகியவற்றினூடாக ஆய்வாளரினால் திரட்டப்பட்டது.

**ஆய்வின் முக்கியத்துவம் (Importance of the Study)**

சர்வதேச மட்டத்தில் கல்விக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் யாவரும் அறிந்ததே. அந்த அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்வது மாணவர்களது அடிப்படை உரிமையாகும். இவ் உரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது சமூகத்தின் மீதான கடமையாகும். எனவே இந்த அடிப்படைக் கல்வியை (மார்க்கக் கல்வியை) விட்டு விலகிச் செல்வதானது சகல மட்டங்களிலும் பாதிப்புகளையும், விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. இவ்விடைவிலகல் தனிப்பட்ட பிரச்சினையல்ல; மாறாக முழுமொத்த சமூகம் சார் சிக்கலாகும். ஆகவே மொத்த சமூகமும் விடை வேண்டிநிற்கும் ஓர் ஆய்வுப் பிரச்சினை என்ற வகையில் இந்த ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

இடைவிலகல் மாணவர்களில் ஏற்படுத்தும் சமூகத்தாக்கங்கள், விளைவுகள் இன்று முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவது இரண்டும் கெட்ட நிலையை உருவாக்கிறது. அதன் மூலம் மாணவன் பாதிப்படைகிறான் என்ற வகையில் இது சார்ந்த ஆய்வுகளின் தேவைப்பாடு உணரப்பட்டது. ஆய்வாளர்கள் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் அரச நிருவனங்கள் அது சார்ந்த அமைப்புக்களது பிரச்சினைகளை ஆய்வுக்குற்படுத்திய போதிலும் அரபுக் கல்லூரிகள், ஷரீஆ நிறுவனங்கள் சார்ந்த பிரச்சினைகளை ஆய்வுக்குற்படுத்துவற்கோ அல்லது அதற்கான தூண்டுதல்களை வழங்குவதற்கோ முன்வருவதில்லை என்றவகையில் இந்த ஆய்வுத் தலைப்பு அது சார் சமூகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது எனலாம்.

**ஆய்வின் எல்லை (Limitation)**

- தலைப்பு எல்லை : அறபுக் கல்லூரி ஷரீஆத் துறை மாணவர்களது இடைவிலகல்
- கால எல்லை : 2009 தொடக்கம் 2017 வரை
- பிரதேச எல்லை : அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி
- ஆள் எல்லை : இடைவிலகிய மாணவர்களும் அவர்களது நண்பர்களும், பெற்றோர்களும், கல்லூரி ஆசிரியர்களும் நிர்வாகிகளும்.

**இலக்கிய மீளாய்வு (Literature Review)**

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இது தொடர்பான ஆய்வுகளை தேடலுக்கு உட்படுத்திய போது இலங்கையில் உள்ள அரபுக் கல்லூரி மாணவர்களது இடைவிலகல் தொடர்பான ஆய்வுகள் செய்யப்படாமை இனங்காணப்பட்டதுடன் அரசாங்க பாடசரலை மாணவர்களது இடைவிலகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட பொதுவான சில ஆய்வுகள் வாசிப்புக்குட்படுத்தப்பட்டது.

'கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவனம் உதவி அரசாங்கஅதிபர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசலைகளில் மாணவர் இடைவிலகல் ஓர் ஆய்வு' என்ற ஜீ குணசிங்கம், எஸ் உதய குமார் ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட ஆய்வானது அந்த குறித்த பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் சில காரணங்களை மாத்திரம் இனங்கண்டு ஆய்வு முன்வைக்கப் பட்டுள்ளது. அவ்வாய்வில் பாடசாலை மாணவர்களது இடைவிலகளைத்

தூண்டிய மிகப் பிரதானமான காரணிகளாக வறுமை, பொருளாதாரம், இடம்பெயர்வு, பெற்றோர்மரணம் ஆகியவற்றை அடையாளங்கண்டு ஆய்வுக்குட்படுத்தியுள்ளனர். இந்த ஆய்வானது பிரதேச அடிப்படையிலும் காரணங்களின் அடிப்படையிலும் இந்த ஆய்விலிருந்து வேறுபடுகின்றது.

ஈராக் நாட்டின் காதிஸியா பல்கலைக்கழக கலைமானி பட்டப்படிப்பின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரையான 'அஸ்பாபுத் தஸர்ருபித் திராஸி லதல் மரஹலதில் முதவஸ்ஸிதா வ துவருல் முர்ஷிதித் தர்பவி பீ மஆலிஜிஹா' (மாணவர்களது இடைவிலகளுக்கான காரணிகளும் அவற்றைத் தீர்ப்பதில் ஆற்றுப்படுத்துபவரின் பங்களிப்பும்) என்ற ஆய்வுக் கட்டுரையானது குறித்த மாணவர்களை மையப்படுத்தி, அவர்களது இடைவிலகலுக்கான காரணிகளை பிரதானமான நான்கு தலைப்புகளில் உள்ளடக்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது ஆனால் அக்காரணிகள் பாடசாலை மாணவர்களை வைத்தே ஆய்வுக்குட்படுத்தியமையானது இந்த முழுநேர, வதிவிட அறபுக் கல்லூரி மாணவர்களையும், அவர்கள் முன்னோக்கும் காரணிகளையும் ஆய்வுக்குட்படுத்தியமையானது பல வகையிலும் வேறுபடுகின்றது.

இவ்வாறாக இடைவிலகள் குறித்து பல ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டிருந்தாலும் குறிப்பாக இலங்கை அரபுக் கல்லூரி மாணவர்களது இடைவிலகல் தொடர்பான எதுவித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்ற வகையில் இவ்வாய்வு முன்னால் குறிப்பிட்ட ஆய்வுகளில் இருந்து வேறுபடுகின்றது.


**ஆய்வின் கலந்துரையாடல்களும் அடைவுகளும் (Discussion & Findings)**

இங்கு ஆய்வுப் பிரதேசமாக கிழக்கிலங்கை அரபுக்கல்லூரி மையப்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் சன்மார்க்கக் கல்வி வரலாற்றில் கிழக்கிலங்கை அறபுக்கல்லூரி ஓர் திருப்புமுனையாக அமைந்துள்ளது. 1953.11.08ஆம் திகதியன்று 12 மாணவர்களுடன் சன்மார்க்கப் பேரொளி அல்லாமா அப்துள்ளாஹ் ஹழரத் அவர்களை அதிபராக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி, 1956.06.01ஆம் திகதியிலேயே MRCA/13/1/AL/3 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1963ஆம் ஆண்டு 16 ஆளுமை மிக்க உலமாக்களை பிரசவித்து கன்னி விழாவை கொண்டாடிய இதனது பயனம் இன்று 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வைர விழாவையும் கண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இன்று வரை 6 கலாநிதிகளையும், முதுகலைமானி, கலைமானி முடித்த பல அறிஞர்களையும், பயிற்சி பெற்ற ஆசிரியர்களையும் உயர் அரச உத்தியோகத்தர்கரைளயும், சமூகத்திற்களித்து கல்வி ஒளி பரப்பி உயர்வு கண்டு வருகிறது(வைர விழா சிறப்பு மலர், 2016, p. 2-4). ஜாமியா என்ற தரத்திற்கு கல்லூரியை உயர்த்துவதற்கான சகல பணிகளும் நிறைவு பெறும் தருணத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் இக்கல்லூரி வரலாற்றிலும் வளர்ச்சிக்காலம் தேய்வு காலம் என்பன விதிவிலக்கல்ல. ''அப்துஸ் ஸமத் ஆலிமின் விலகலின் பிற்பாடு 15 மாணவர்களைத் தவிர ஏனையோர் இடைவிலகிச் சென்றமையானது இத்தேய்வு நிலைக்கு காரணமாகியது'' என்ற எஸ். எச். ஆதம்பாவா பாவாஷர்க்கி மதனி உஸ்தாதின் கூற்று(வைர விழா சிறப்பு மலர், 2016, p.xv). இந்த தொடரான இடைவிலகல் செயற்பாட்டின் உண்மைத் தன்மையை உணர்த்துகின்றது. ஆகவே நாம் ஆய்வுக்கு உற்படுத்திய இக்கல்லூரி சார் சமூகம் இந்த ஆய்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வர் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இவ்வாய்வில் கிழக்கிலங்கை அரபுக்கல்லூரி ஷரீஆத் துறை மாணவர்களது இடைவிலகலை அடையாளப்படுத்த 2009-2015, 2010-2016, 2011-2017 ஆகிய மூன்று வருட காலத்தையும் ஒன்று முதல்

ஏழு வரையிலான வகுப்புக்களையும் எழுமாறாகக் கொண்டு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. இதில் தரவுகளை Ms Excel மூலம் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் மாணவர்களது இடைவிலகலைக் கண்டறிய மாணவர் வரவுப் பதிவேட்டின் மூலம் பெறப்பட்ட விபரங்கள் பின்வருமாறு.

| வருடம் | சேர்ந்த மாணவர் தொகை | பட்டம் பெற்ற மாணவர் தொகை | இடைவிலகிய மாணவர் தொகை |
|---|---|---|---|
| 2009 - 2015 | 24 | 09 | 15 |
| 2010 - 2016 | 24 | 09 | 15 |
| 2011 - 2017 | 15 | 07 | 08 |





வரைபு 01

இதன் மூலம் 2009 – 2017 வரை இடைவிலகிய மாணவர்களது தொகையை அறிந்து கொள்ள முடிந்தது. அவ்வாறே 1 முதல் 7 வரையான வகுப்புக்களது மாணவர் இடைவிலகலை அறிந்து கொள்ள மாணவர் பதிவேட்டின் பிரகாரம் பெறப்பட்ட தரவுகள் பின்வருமாறு.

| வகுப்பு | 1ஆம் வருடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டோர் தொகை | நடப்பு ஆண்டில் உள்ள மாணவர் தொகை | இடைவிலகியோர் தொகை |
|---|---|---|---|
| 1ஆம் வகுப்பு | 35 | 27 | 08 |
| 2 ஆம் வகுப்பு | 11 | 10 | 01 |
| 3 ஆம் வகுப்பு | 32 | 18 | 14 |
| ஆம் வகுப்பு | 27 | 15 | 12 |
| 5 ஆம் வகுப்பு | 34 | 09 | 25 |
| 6 ஆம் வகுப்பு | 40 | 15 | 25 |
| 7 ஆம் வகுப்பு | 36 | 16 | 20 |

உருபு 01

அவ்வாறே தற்பொழுது விடுகை வருடத்தில் கற்கும் மாணவர்களது இடைவிலகலைக் கணிப்பிடுவதற்கு அவர்களது 7 வருட கால வரவுப் பதிவேட்டின்படி பெறப்பட்ட தரவுகள் பின்வருமாறு.




வரைபு 02

மேலே காட்டப்பட்டுள்ள வரைபடத்தின் படி 1ஆம் 2ஆம் 3ஆம் வகுப்புக்களிலேயே அதிகமான இடைவிலகல் ஏற்பட்டுள்ளமையை அவதானிக்கமுடிகிறது.


மாணவர்களது இடைவிலகல் செயற்பாடு என்பது திடீரென்று நடக்கும் ஓர் நிகழ்வல்ல. மாறாக பல நாட்களுக்கு முன்பே இடைவிலகக் கூடிய காரணிகள் அவர்களிடையே செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே ஆய்வுப் பிரதேசமான அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி ஷரீஆ துறை மாணவர்களது இடைவிலகலைத் தூண்டிய காரணங்கள் என்ற வகையில் இடைவிலகியவர்களிடமும் அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் ஆகியோரிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டன.

இடைவிலகலைத் தூண்டிய ஒட்டுமொத்த காரணங்களையும் நான்கு தலைப்புகளில் மையப்படுத்த முடிந்தது.

- மாணவர் சார் காரணங்கள்
- குடும்பம் சார் காரணங்கள்
- கல்லூரி சார் காரணங்கள்
- சமூகம் சார் காரணங்கள்

| மாணவர்சார் காரணிகள் | குடும்பம் சார் காரணிகள் | கல்லூரி சார் காரணிகள் | சமூகம் சார் காரணிகள் |
|---|---|---|---|
| • ஷரீஆ துறையில் விருப்பமின்மை.<br>• தீய பழக்கங்கள்<br>• வீட்டை விட்டுப் பிரிய முடியாத நிலை<br>• மன அழுத்தம்<br>• சுகயீனம்<br>• கிரகித்தல் குறைபாடு<br>• புத்தி குறைபாடு | • வறுமை<br>• பெற்றோரின் மரணம்<br>• பெற்றோர் வெளிநாடு செல்லல்.<br>• பெற்றோரின் வற்புறுத்தல்.<br>• பராமரிப்புக் குறைபாடு.<br>• பெற்றோரின் அறிவுப் பின்புலம். | • கற்பித்தல் முறைகளிலுள்ள குறைபாடு<br>• பாடத்திட்டம்.<br>• பரீட்சைகள்.<br>• ஆசிரியர், மாணவர் முறண்பாடு.<br>• தண்டணை முறைகள்.<br>• மாணவர்களுக்கு மத்தியிலுள்ள முறண்பாடுகள்.<br>• மாணவர்களுக்குத் தேவையான ஏனைய கற்கை நெறிகளை முக்கியத்துவப்படுத்தாமை. | • தீய நண்பர்கள்<br>• மார்க்க கல்வி தொடர்பான பிழையான புரிதல் |


இடைவிலகலைத் தூண்டிய காரணங்களை இடைவிலகிய மாணவர்களின் நண்பர்களிடம் கொடுக்கப்பட்ட வினாக் கொத்தின் அடிப்படையில் தகவல்கள் பின்வருமாறு




வரைபு 03

ஷரீஆ துறை மாணவர்கள் கல்லூரியிலிருந்து இடைவிலகிச் சென்றமைக்கான காரணிகளைக் கண்டறிந்த போதும் அக்காரணிகளில் பெரும்பாலான மாணவர்கள் முன்வைத்த காரணிகளைப் பார்க்கின்ற போது அவை கல்லூரி சார் காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டன. அத்தகைய காரணிகளுக்குத் தீர்வு காணும் போது நிச்சயமாக மாணவர்களது இடைவிலகலைக் குறைக்கலாம் என்பது நமது நிலைப்பாடாகும். மாணவர்கள் திருப்திகரமாக இருப்பதற்கு மையப்புள்ளியே அறபுக் கல்லூரிசார் விடயங்கள்தான். ஒப்பீட்டு ரீதியில் விலகிச் சென்ற மாணவர்களது தொகை பெரும்பாலும் கல்லூரி சார் காரணிகளையே சுட்டிக் காட்டின. அதிலும் குடும்ப நிலை சார் காரணிகளான வறுமை, பெற்றோரின் பிரிவு போன்ற காரணிகளை அடைந்த அதிகமான மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருப்பதும் இந்த ஆய்வின் வெளிப்பாடாகும். இன்னும் குடும்பப் பிரச்சினைகளற்ற வறுமை, பொருளாதார சுமைகள் இல்லாத மாணவர்கள் கூட கல்லூரிப் பிரச்சினைகளால் கல்லூரி சார் பிரச்சினைகளால் அதிகாமாக விலகிச் சென்றுள்ளமையானது ஆய்வின் மற்றொரு கண்டறிதலாகும்.


ஆசிரியர்கள் முன்வைத்த காரணிகளை அவர்களுக்கு கொடுத்த வினாக் கொத்தின் அடிப்படையில் வின்வருமாறு காணமுடிந்தது.




வரைபு 04

இங்கு ஆசிரியர்கள் முன்வைத்த காரணிகளுள் கல்லூரி சார் காரணங்களே அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதை காண முடிந்தது.

இருசாராரும் முன்வைத்த இடைவிலகலுக்கான காரணங்களை பின்வருமாறு காட்டலாம்.




வரைபு 05

ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற போது விகிதாசார அடிப்படையில் கல்லூரி சார் காரணிகளே செல்வாக்குச் செலுத்துகின்றமை மிகத் துல்லியமாக அவதானிக்கப்பட்டது. எனவே நாம் இங்கு கல்வி சார் காரணங்களைத் தீர்ப்பதற்கான சில முன்மொழிவுகளை அது சார் சமூகத்திற்குப் பரிந்துரைக்கிறோம்.

**முடிவுரை (Conclusion)**

ஆய்வுப் பிரதேசமான கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி மாணவர்களின் கடந்த கால இடைவிலகல் வீதத்தினையும், காரணிகளையும் கண்டறிந்ததுடன் இடைவிலகல் செயற்பாடு திடீரென நிகழும் ஒன்றல்ல என்றும் மாணவர்களது இடைவிலகலுக்கு உடனடிக்காரணிகள் இருந்த போதிலும் அது நீண்டகால மனவெழுச்சியின் வெளிப்பாடு என்பதனையும் அறிந்து கொள்ள முடிந்தது. இந்த ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ள விதந்துரைகள் இலங்கையில் அறபுக் கலாசாலை மாணவர்களின் இடைவிலகலைக் குறைக்கும் என்றும் அறபுக் கலாசாலை சார் சமூகம் இடைவிலகலைக் குறைக்க முன்னெடுக்கவிருக்கும் முயற்சிகளுக்கும் திட்டங்களுக்கும் இவ்வாய்வானது பக்கபலமாக இருக்கும் என்பதே ஆய்வாளர்களது நம்பிக்கையாகும்.

ஆய்வுக்குட்படுத்திய கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி மாணவர்களது இடைவிலகலின் தொகை இங்கு மிகத் துல்லியமாகக் கணிக்கப்பட்டு அவர்களது இடைவிலகலுக்கான காரணிகள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றிலும் அதிகளவு செல்வாக்குச் செலுத்துகின்ற பிரதான காரணிகளாக கல்லூரி சார் காரணிகளே இனங்காணப்பட்டது. எனவே ஆய்வாளர்கள் இங்கு கல்லூரி சார் காரணிகளால் ஆரம்ப வகுப்புக்களிலேயே ஏற்படுகின்ற அபரிமிதமான இடைவிலகலைக் குறைப்பதற்கான சில முன்மொழிவுகளை இங்கு பரிந்துரைக்கிறோம்.

**பரிந்துரைகள் (Recommendation)**

1. அண்மைக் காலத்தில் இடைவிலகிய மாணவர்கள் குறிப்பிட்ட உட்கட்டமைப்பு வசதிகளான இட, விடுதி மற்றும் உணவு வசதிகள் திருப்தியின்மை போன்ற விடயங்கள் உண்மையாக இருந்த போதிலும் உணவுப் பிரச்சினை ஓர் திருப்தி நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் விடுதி மற்றும் இடவசதிகளுக்கான கட்டிட நிர்மானப் பணிகள் மிக வேகமாக நடந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் மாணவர்களால் முன்வைக்கப்பட்ட ஏனைய பௌதீக வசதிகள் இனங்காணப்பட்டு முறையாகத் திட்டமிட்டு அவசரமாகவும், அவசியமாகவும் செய்து கொடுக்க அது சார் நிறுவனங்கள் ஆவன செய்ய வேண்டும

2. மாணவர்களுக்கு இத்தூய அறிவைத் தேடுவதன் சிறப்புக்கள் நோக்கங்கள், மற்றும் அதன் மூலமாகக் கிடைக்கும் நிரந்தரமான பயன்கள் ஆகியவற்றைக் கவர்ச்சி கரமான முறையில் அவர்களது சிந்தையில் பதியவைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.
3. மாணவர், ஆசிரியர் ஆகியோருக்கு இடையில் உறவைப் பலப்படுத்துவற்கான ஆரோக்கியமான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
4. சவால் நிறைந்த, நடைமுறை வாழ்விற்குப் பொருந்திச் செல்லும் வகையில் மாணவர்களது திறன்களை விருத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சிகளையும் வழிகாட்டுதல்களையும் முன்னெடுக்க வேண்டியது அது சார் சமூகத்தின் பொறுப்பாகும்.
5. கற்பித்தல் முறைகளில் விருப்பமின்மையால் இடைவிலகல் ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய நவீன கற்பித்தல் முறைகளைக் கையாளுதல்.
6. கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி அறபு சரீஆ துறையினது தரம் பல தசாப்தங்கள் சென்றும் தோய்வின்றி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் கல்லூரியின் கலைத்திட்டம் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு மாணவர்களது எதிர்கால தொழில்சார் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு இதர கற்கைகளும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**உசாத்துணைகள்(References)**


- Gunasingam, k. & Uthayakumar, S. (2014). "கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடாலைகளில் மாணவர் இடைவிலகல் - ஓர் ஆய்வு".
- Uthayakumar, S.S., (2011). "மாணவர்களின் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் குடும்ப, பொருளாதார சூழலகள் : யாழப்பாண பிரதேச செயலார் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசடலைகளைச் சிறப்பாக கொண்ட ஆய்வு".
- நியாஸ், யூ.எம்.(2016, March). "ஷர்க்கிய்யா அரபுக் கல்லூரயின் வரலாற்றுப் பார்வை ". வைரவிழா சிறப்பு மலர், 2-3. .

- Annual Report. (2010). "Department of Muslim Cultural Affairs, Sri Lanka, Colombo, (2018). Annual Report Retrieved from [info@muslimaffairs.gov.lk](mailto:info@muslimaffairs.gov.lk)
- Videnovic, M., Lazarevic, L.B. (2017). "Familial and Individual reasons for students' dropout schools' perception".
- الأميري ، شاكر محمود عيال. (2010). " التحليل المكاني لظاهرة تسرب تلاميذ التعليم الإبتدائي في مدينة بغداد. رسالة ماجستر، كلية الأدب، جامعة بغداد".
- ولاء طالب حمزة، هديل جابر ماضي ،هدى رياض محيي، هنادي عبد الكاظم حسين. (هـ2017\1438). " أسباب التسرب الدراسي لدى طلبة المرحلة المتوسطة و دور المرشد التربوي في معالجتها ".

ما هو التسرب الدراسي؟" منع التسرب – استراتيجيات لتحسين معدلات التخرج من المدارس الثانوية. مركز سياسات الطفل والأسرة **3**"موجز) (**2007**كارا بوني بجامعة ديوك، ص. (**17–14**) Agar Mohammed, ac. (2008, November 01). Sheikhagar.org retrieved from www.sheikhagar.org/